**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.370/2023**

**Prosecution witness : அ.சா. 1 Date : 15.11.2024**

| Name : சேட்டு | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மதுபான கடையில் வேலை செய்கிறேன். சம்பவம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. சம்பவத்தன்று நான் பணி முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அசா.1 யார் அடித்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 27.04.2023ம் தேதி இரவு 10.45 மணிக்கு நான் ஐந்தாவது மைல் மதுபான கடையில் பணியில் இருந்தபோது இந்த வழக்கின் எதிரி மது அருந்திவிட்டு அங்கிருந்து ரவிச்சந்திரன் என்பவரிடம் பணம் ரூ.50 கேட்டதாகவும் அவர் தரமறுத்தால் அ.சா.1யை கெட்ட வார்த்தையால் திட்டி முதுகின் மீது எட்டி உதைத்து கீழே தள்ளி அவரது இரண்டு கைகளையும் பிடித்து தார் ரோட்டில் சிறிது தூரம் இழுத்து சென்றதாகவும் சத்தம் போட்டால் பீர்

பாட்டிலால் அடித்து கென்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டு. போலீசார் விசாரணையில் சொல்லியுள்னேன் என்றால் சரியல்ல். எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.